வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ‘இளமால் குளம் இசக்கியம்மன் வழிபாடு

**பெ.ஜெகதீஷ்,**
**முதுகலைத்தமிழ்முதலாமாண்டு,**
**பாரதியார் பல்கலைக்கழகம்,**
**கோயம்புத்தூர்.**
8248776590

ஆய்வுச் சுருக்கம் :

நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்வியலோடும் பண்பாட்டு அடையாளங்களோடும் தொடர்புடைய சிறுதெய்வங்களின் வரலாற்றையும் நீட்சியையும் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு களாய்வின் மூலம் அறிந்த செய்திகள் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முப்பந்தல் இசக்கியம்மன் வரலாறும் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் ஒன்றியம் வடக்கு இளமால்குளதில் அருள்பாலிக்கும் இசக்கியம்மனின் கதையையும் அவ்வூருக்கு இசக்கியம்மன் வந்த வரலாறும் அங்குள்ள மக்களால் நடத்தப்பெறும் ஊர்க் கொடையையும் சடங்குகளையும் இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது.

கலைச்சொற்கள்:

முப்பந்தல் இசக்கியம்மன் - இளமால்குளம் - கொடை விழா - நேமிசப் பூசை - சாமப் பூசை - சடங்குகள்.

முன்னுரை:

சங்ககால மனிதன் தன் அறிவுக்கு எட்டாத ஆற்றல் இவ்வுலகில் இருப்பதை இனங்கண்டுக் கொண்டான். அவ்வாற்றலைத் தெய்வம், கடவுள், இறைவன் போன்ற பெயர்களால் சுட்டி வழிபடலானான். அன்று அவன் செய்த வழிபாடுகளும் சடங்குகளும் அவனின் பண்பாட்டோடு தொடர்புடையதாக இருந்தது. அவர்கள் வழிபட்ட தெய்வங்கள்

அனைவரும் அவனது இனத்திலிருந்து முகிழ்த்தெழுந்தவர்கள்.இந்த சிறுதெய்வ வழிபாடுகள் நிறுவனமயமாக்கப்பட்ட பெருஞ்சமயங்களோடு தன்னைக் கரைத்துக்கொள்ளாமல் இன்றுவரை உயிர்ப்புடன் அதன் பண்பாட்டுத் தொடர்ச்சியைக் கடத்திவருகிறது. அத்தகைய சிறப்புமிக்க தெய்வமான இசக்கியம்மனுக்கு வடக்கு இளமால்குளம் என்ற கிராமத்தில் நடைபெறும் சடங்குகளையும் வழிபாடுகளையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முப்பந்தல் இசக்கியம்மன்:

கொலை, தற்கொலை மூலமாக இறந்த பெண்களையோ, கணவனுக்காக தீப்பாயந்து உயிர் துறந்த பெண்களையோ நாட்டுப்புறங்களில் தெய்வங்களாக வழிபடுகின்றனர். அதுபோல கொலை செய்யப்பட்ட பெண்ணான இசக்கி தெய்வமாகிறாள். குறிப்பாக தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற பகுதிகளில் பள்ளர், நாடார், கோனார் போன்ற இனமக்களுக்கு இசக்கி வழிபாட்டுத் தெய்வமாகிறாள். இசக்கியின் வரலாறு நாட்டுப்புற மக்களிடம் பரவலாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு பகுதியிலும் இசக்கியம்மன் பற்றிய வழக்காறுகள் பலவிதமாக வழங்கப்படுகிறது. அடிப்படையில் அனைத்துக் கதைகளும் பழையனூர் நீலியோடு தொடர்புடையதாகவே காணப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் முப்பந்தல் என்னும் ஊரில் அமைந்த இசக்கியம்மன் ஆலயம் பிரசித்திப் பெற்றதாகும். பொதுவாக இத்தெய்வம் சிவப்பு உடை உடுத்தி, கையில் ஒரு குழந்தையை ஏந்தியபடியே காட்சி தருகிறாள்.

இளமால்குளத்தில் இசக்கியம்மன்:

சிலநூறு ஆண்டகளுக்கு முன்னர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள இளமால்குளம் என்ற கிராமத்தில் நாடார் மற்றும் கோனார் சமூகத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வந்தனர். நாடார்களுக்குச் சொந்தமான நிலங்களில் கோனாரின மக்கள் தங்களின் கால்நடைகளை மேய்ப்பது வழக்கம். ஒரு முறை வழக்கம் போல தேவேந்திர கோனார் என்பவர் பிச்சை நாடாரின் நிலத்தில் கால்நடைகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது அவருக்கு அந்திலத்தில்

தங்க நகையொன்று கிடைத்தது. அதை நாடரும் கவனித்தார். தன்னுடைய நிலத்தில் இருந்ததென்பதால் அது தனக்குச் சொந்தமென்று நாடாரும் நான்தான் அதைக் கண்டெடுத்தேன் அதனால் அது எனக்குத் தான் சொந்தம் என்று கோனாரும் உரிமை கோரினர்.அவர்கள் இருவருக்கும் வாக்கு வாதம் முற்றி இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தனர். மறுநாள் ஊர்ப் பஞ்சாயத்தில் தீர்மானிப்பதென்பது தான் அம்முடிவு. இருவரும் அந்நகையை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு அதைக் கூடையால் கவிழ்த்துவிட்டு வீட்டுக்குச் சென்றனார். ஆனால் தேவேந்திர கோனார் மட்டும் வீட்டிற்குச் செல்லாமல் மறைந்திருந்தார். பிச்சை நாடார் சென்ற பிறகு அந்நகையை யாருக்கும் தெரியாமல் எடுத்துக்கொண்டார். மறுநாள் கூடையைத் திறந்த ஊர் மக்களுக்கு பேரதிர்ச்சி. இருவரும் ஊர்மக்கள் நம்பும்படி அவர்கள் வழிபடும் தெய்வமான முப்பந்தல் இசக்கியம்மன் மீது ஆணையாக நான் எடுக்கவில்லை என்று இருவரும் சத்தியம் செய்தனர். குழப்பத்துடன் அக்கூட்டம் கலைந்துச் சென்றது. இச்சம்பவம் நடந்த சில வாரங்களிலேயே தேவேந்திரக் கோனார் மர்மமான முறையில் இறந்துவிட்டார்.அதனால் அவரின் குடும்பத்தார் தேவேந்திர கோனார் தான் அந்நகையைத் திருடினார் என்றக் குற்றத்தினை ஊராரிடம் ஒப்புக்கொண்டனர். அவர்கள் அந்நகையை விற்றுவிட்டதையும் அதை அவர்களால் திருப்பித்தர இயலாது என்பதையும் செல்லிவிட்டு ஊரிலிருந்து வெளியேறினர். அதிலிருந்து கோனார்கள் வசிக்கும் பகுதி தெற்கு இளமால்குளம் என்றும் நாடார்களின் பகுதி வடக்கு இளமால்குளம் என்றும் இரண்டாகப் பிரிந்தது. வெளியூருக்குச் சென்றும் தேவேரந்திரனின் குடும்பத்தில் ஒவ்வொருவராக இறந்துக் கொண்டிருந்தனர். இசக்கியின் கோபம் தான் இதற்குக் காரணம் என்று அவர்கள் நம்பினர். மறுபுறம் பிச்சை நாடார் குடுப்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் உடல் உபாதைகள் ஏற்ப்பட்டன. அவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பிறகுதான் ஒரு உண்மை அவர்களுக்குத் தெரியவந்தது. அவர்கள் இருவரும் உரிமைக் கோரிய அந்த நகை திருடன் ஒருவனால் விட்டுச்செல்லப்பட்ட நகை. அதிலும் ஒரு திருப்பம் என்னவென்றால் அது முப்பந்தல் இசக்கியின் நகை. அவர்கள் இருவரும் அவளின் உடமையான நகைக்கு உரிமைக் கோரி

அவள் மீதே சத்தியம் செய்ததால் தான் இத்தனையும் நேர்கிறது என்று உறுதியாக நம்பினர். அவர்களுக்கு ஏற்ப்பட்ட அச்சத்தால் இருகுலத்தாரும் ஒன்று சேர்ந்து இசக்கியம்மனுக்கு கோயில் கட்டத் தொடங்கினர். கோயில் கட்டி முடிந்த நிலையில் கோனாரின் வம்சத்தில் ஓர் உயிர்க்கூட மிஞ்சவில்லை. பிறகு அக்கோயில் நாடார்களின் பொறுப்பில் வழிபாடுகள் இன்று வரை நடந்துக்கொண்டிருக்கிறது.

கொடை விழா

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் நடைபெறும் சிறுதெய்வ திருவிழாக்கள் கொடை விழா என அழைக்கப்படுகின்றன. இந்தக் கொடை விழா பெரும்பான்மையாக தமிழ் மாதங்களான பங்குனி, சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில் நடைபெறுகின்றன. எனவே இது முன்பு கோடை விழா என்றழைக்கப்பட்டு, பின்னர் கொடை விழா என்று மருவி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வடக்கு இளமால்குளத்தில் இசக்கியம்மன் ,ஞானகரை சுடலைமாடன் மற்றும் உய்க்காட்டு சுடலைமாடன் என்று மூன்று கோயில்கள் உள்ளன. அனைத்தும் நாட்டார் தெய்வங்கள். ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதம் முதல் செவ்வாயில் ஒவ்வொரு தெய்வத்திற்கு விழாயெடுப்பர். அதன்படி இசக்கியம்மனுக்கு மூன்று வருடத்திற்கு ஒரு முறை கொடை விழா நடைபெறும். விழாவிற்காக வசூலிக்கப்படும் பணத்தை வரி என்று வழுங்குகிறார்கள். ஒரு வீட்டிற்கு ஒரு வரியாகயில்லாமல் ஒரு வீட்டில் திருமணமான இரண்டு ஆண்கள் இருப்பின் அவர்கள் இரண்டு வரியாக வசூலிக்கின்றனர். விழாவன்று காலையில் கால்நடுதல் என்ற சடங்குடன் கொடை விழா ஆரம்பிக்கும். திருச்செந்தூர் கடலிலிருந்து கொண்டுவரப்பட்ட நீரினை மண் கலையத்திலூற்றி அதைக் கலசமாக்கி அதில் கணபதியை ஆவாகனம் செய்து வேதியர்களால் கணபதி ஹோமம் நடைபெறும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவதால் கணபதி ஹோமம் செய்வதாக ஊர் மக்கள் கூறுகின்றனர். 5 மணியளவில் மகுடம் என்னும் இசைக்கருவியைக் கொண்டு கணியான் கூத்து நிகழ்த்தப்பெறும்.அதில் இசக்கியின் வரலாற்றைக் கதைப்பாடலாகப் பாடுவார்கள்.

அவ்வேளை இசக்கியம்மனுக்கு அலங்காரம் செய்யப்படும். இருட்டத் தவங்கியதும் முக்கியமான சடங்குகள் ஒவ்வொன்றாக நிகழ்த்தப்படும்.

நேமிசப் பூசை

பக்தர்கள், இறைவனிடன் வேண்டிக்கொண்ட வேண்டுதல்கள் நிறைவேறிய பின் செலுத்தும் நன்றிக்கடனை இவர்கள் நேமிசம்( நேர்த்திக்கடன்) என்று குறிப்பிடுகின்றனர்.இரவு 9 மணிக்கு மேலாக கோயிலில் சாமக்கொடைக்குத் தேவையானவைகளைத் தயார் செய்த பிறகு கோயிலின் திரை விலக்கி அம்மனுக்கு முன் ஆட்டுக்கிடாய் ஒன்றினைப் பலியிட்டு சோற்றில் காய்கறி குழம்பினை ஊற்றி படையலிட்டு கோத்திரி ஏற்றி நேமிசப்பூசையினைச் செய்கிறார்கள். துணியால் சுத்தப்பட்ட குச்சியினைக் கோத்திரி என்று அவ்வூரில் அழைக்கின்றனர். அதனைத் தொடர்ந்து சாமியாடி வீடு வீடாகச் சென்று பூசைத் தொடங்கவிருப்பத்தை அறிவிக்கும் வகையில் அவர்களின் நேமிசப் பொருட்களை வாங்கி வருவார். இசக்கியின் அருளால் குழந்தைப்பேறு அடைந்தவர்கள் சீலைப்பிள்ளையையும் , கருவுற்றவர்கள் தொட்டிலையும், திருமணமானவர்கள் பட்டுச்சேலையையும் நேமிசமாக அளிப்பர்.

சாமக்கொடை

நள்ளிரவானதும் ஊர்மக்களும் நேமிசப்பொருட்களை வாங்கி வந்த சாமியாடியும் கோயிலை அடைந்து பிறகு சாமக்கொடை நடைபெறும். பரம்பரை பரம்பரையாக சாமியாடும் நபரின் மீது தெய்வமிறங்கியப் பிறகு ஆச்சர்யங்கள் நிறைந்த பலியிடும் சடங்குகள் நிகழும். கழு போன்ற வடிவில் கூர்மையாக பனை மட்டையினைச் செதுக்கி, அதன் முனையில் பெட்டைக் கோழியினை அதன் எருவாயின் வழி சொருகி பலியிடுகின்றனர். அடுத்து சேவலின் கழுத்தைத் திருகி அதன் இறகுகளை நீக்கி பனை மட்டையில் சொருகியவாறு தீயிலிட்டு சுடுகின்றனர். அடுத்ததாக செவளை, கறுப்பு, வெள்ளைப் போன்ற பல நிறங்கள் கொண்ட ஆட்டுக்கிடாயினைப் பலியிடுகின்றனர். பலியிட்டவைகளுடன் வாழைச்சீப்பு

முதலான பழங்கள், தேங்காய்கள், முட்டைகள் போன்றவற்றை படையலிட்டு மகுடயிசை ஊரெங்கும் ஒலிக்க தீபாராதனையுடன் இசக்கிக்கு பூசை நடைபெறும்.

தெய்வமிறங்கிய நபர் அவித்த முட்டைகளை எடுத்துக் கொண்டு அவ்வூரின் வடக்கிலுள்ள சுடுகாட்டிற்குச் சென்று அங்குள்ள பேய்களுக்காக ஆகாயத்தை நோக்கி எறிவர். அங்கிருந்து நேராக கோயிலக்கு வந்து நேர்த்திக்கடனாக வைக்கப்பட்ட சீலைப் பிள்ளையினை ஏந்தியபடி ஆவேசத்துடன் ஆடியும் சத்தமிட்டும் மக்களுக்கு குறி கூறுவார். விழாவின் நிறைவாக மக்களனைவரும் அம்மனை வணங்கியப் பிறகு அவர்களுக்காக பங்கிடப்பட்ட கறிசோற்றினை உண்டு விழாவினை இனிதே நிறைவு செய்வார்கள்.

முடிவுரை

மக்களின் பண்பாட்டோடு ஒட்டி உறவாடுபவையாகவும் மக்களின் வாழ்வியலின் அங்கமாக இருப்பவையாகவும் குறிப்பிட்ட வட்டாரத்தை தெரிந்துகொள்ளவோ, அவ்வட்டார மக்களை இனங்கானவோ அடையாளமாக இருப்பவை நாட்டுப்புறத் தெய்வங்களேயாகும். அப்படிப்பட்ட தெய்வமான இசக்கியம்மனுக்கு நடைபெறும் ஊர்க்கொடையையும் அதில் நிகழ்த்தப்படும் சடங்குகளையும் களாய்வின்மூலம் அறிந்துக்கொண்ட செய்திகளே இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.